சென்னை மாநகராட்சி,
மாவட்ட குடும்ப நலத்துறை.
நாள்–25.03.2009.

## டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:–

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களால் தமிழகத்தில் வாழும் ஏழை கர்ப்பிணி தாய்மார்கள் பயன்பெறும் வகையில் டாக்டர். முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் 15.09.2006 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ்,

1. கர்ப்பிணிப் பெண்கள் 19 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ. 12,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
3. முதல் கர்ப்பம் மற்றும் இரண்டாம் கர்ப்பமுற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கர்ப்ப காலத்தில் 7,8,9 வது மாதங்களுக்கும் குழந்தை பிறந்த பின் 1,2,3 ஆம் மாதங்களுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ. 1,000/– வீதம் 6 மாதங்களுக்கு ரூ. 6,000/– நிதி வழங்கப்படுகிறது.

நிதி ஆண்டு 2006–2007 ஆம் ஆண்டு 21,984 பயனாளிகளுக்கு ரூ. 7,32,40,000/– நிதியுதவி வழங்கப்பட்டது. நிதி ஆண்டு 2007–2008 ஆம் ஆண்டு ரூ. 12,54,33,000/– நிதியுதவி 33,702 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டு 2008–2009 ல் ரூ.20,97,60,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு 25,303 பயனாளிகளுக்கு ரூ. 15,05,50,000/– நிதியுதவி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

## ஜனனி சுரக்ஷா யோஜனா

ஜனனி சுரக்ஷா என்பது தேசிய மகப்பேறு உதவித் திட்டத்தின் திருத்தப்பட்ட திட்டமாகும். இது நூறு சதவீதம் மத்திய அரசின் நிதியுதவியுடன் பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கப்பட்டது.

## இத்திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதிகள் பின்வருமாறு :–

1. இத்திட்டத்தில் பயனடைய 19 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. பயனாளிகளின் பெயர் அப்பகுதியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளரால் பராமரிக்கப்படும். குடும்ப நல பதிவேட்டிலும், பிரசவ கால முன் கவனிப்பு பதிவேட்டிலும் பதிவு செய்து மூன்று முறை மருத்துவ கவனிப்பு பெற்றிருக்க வேண்டும்.
3. குடும்ப வருமானம் வருடத்துக்கு ரூ. 12,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. முதல் மற்றும் இரண்டாவது குழந்தை பெற உள்ள தாய்மார்கள் ஏற்கனவே டாக்டர். முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் உதவி பெற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறலாம்.

சென்னை மாநகரில் இத்திட்டத்தை செயல்படுத்த ரூ. 1,73,12,700/– ஒதுக்கப்பட்டு அதில் இது வரை ரூ. 78,24,600/–க்கு உண்டான காசோலை பெறப்பட்டுள்ளது. இம்மாதம் வரை 4637 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:–

இந்தி திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களால் 03.06.2006 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் பயனாளிகள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000/–க்கு மிகாமலும், கல்வித் தகுதியாக 10 ஆம் வகுப்பு வரை தேர்ச்சியோ அல்லது தேர்வின்மையோ பெற்றிருக்க வேண்டும்.

2006–2007 ஆம் ஆண்டில் ரூ. 1,71,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,140 பயனாளிகளுக்கு தலா ரூ. 15,000/– வீதம் வழங்கப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் 2,579 பயனாளிகளுக்கு ரூ. 3,86,85,000/– வழங்கப்பட்டுள்ளது. 2008–2009 ஆம் ஆண்டில் 3,113 பயனாளிகளுக்கு ரூ. 5,65,35,000/– வழங்கப்பட்டுள்ளது.

20/5/09

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ)